17.10.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 37வது பட்டமளிப்பு விழா




கோவை வேளாண்மை பல்கலையின் 37வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில் தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினர், இடமிருந்து துணைவேந்தர் ராமசாமி, வேளாண்மைத்துறை அமைச்சர் துரைக்கண்ணு, குஜராத் மேம்பட்ட ஆராய்ச்சி நிறவனத்தின் துணைவேந்தார் மகேசன்.

## சூரம்பட்டி அணைக்கட்டில் வண்டல் மண் அள்ளும் பணி தீவிரம்

ஈரோடு: ஈரோடு, சூரம்பட்டி அணைக்கட்டில், கடந்த இரு நாட்களாக தூர் வாரும் பணி தீவிரமாக நடக்கிறது. துவக்கத்தில் அணைக்கட்டில் கொட்டப்பட்டிருந்த கட்டட கழிவுகள் அகற்றப்பட்டன. தற்போது தூர்வாரும் பணி தொடங்கியுள்ளது. இதன்படி வண்டல் மண்ணை அள்ளும் பணி துவங்கி உள்ளது. வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக் கொள்ள, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வசதிக்காக, இரண்டு ஜே.சி.பி. இயந்திரங்கள், நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இயந்திரத்துக்கு உரிய வாடகையை செலுத்தி, விவசாயிகள் மண்ணை அள்ளிச் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நடந்த பணியை, கூட்டம் கூட்டமாக நின்று திரளான மக்கள் வேடிக்கை பார்த்தனர். வண்டல் மண் முழுமையாக அள்ளப்படும் பட்சத்தில், மழை காலத்தில் அணைக்கட்டில் அதிக அளவில் நீர்தேக்க முடியும். மண் அள்ளும் பணி, இன்னும் பத்து நாட்கள் நடக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கிராமப்புறங்களில் தங்கி வேளாண் மாணவியர் பயிற்சி

ஈரோடு: கோவையில் உள்ள, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவியர், 11 பேர், ஈரோடு மாவட்டத்தில் கிராமங்களில் தங்கி, விவசாயம் குறித்த பயிற்சி பெறுவதுடன், விவசாயிகளுக்கு செயல் விளக்கங்களை காண்பிக்கின்றனர். மாணவி கவுதமி தலைமையில் தாட்சாயிணி, நவீனா, ரம்யா, சுப்ரியா, காயத்ரி, பிரியங்கா, நிவேதா, ஜமுனா ராணி, வேதா ஆகியோர் செயல்முறை விளக்க பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது கவுந்தப்பாடி, பாப்பாங்காட்டூரில் விவசாயி ஒருவர் தோட்டத்தில், வறட்சி காலத்தில் தென்னைக்கு கரும்புசோகை மூலம் மூடாக்கு போடுதல், மண்புழு உரம் தயாரித்தல் குறித்து செயல் விளக்கம் அளித்தனர். கடந்த, 11ல் துவங்கிய செயல்முறை பயிற்சி, நவ.,4 வரை நடைபெற உள்ளது. அந்தந்த பகுதிகளில் சிறந்து விளங்கும் விவசாயிகளின் தோட்டத்துக்கு, மாணவியர் நேரில் சென்று வேளாண்மை பிரச்னைகள் குறித்து விவாதித்து, புதிய செயல்முறை விளக்கங்களை அளிப்பர்.

## நான்கு தடுப்பணைகளில் தூர்வாரும் பணி துவக்கம்

ஈரோடு: ஈரோடு மாநகராட்சி மற்றும் ஒளிரும் ஈரோடு சார்பில், மாநகராட்சி மற்றும் சுற்றுப்பகுதியில் குளம், குட்டை, தடுப்பணைகள் என நீர் நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்தி வருகிறது. இதன்படி, ஈரோடு அருகே கதிரம்பட்டியில் உள்ள, நான்கு தடுப்பணைகளை தூர்வாரும் பணி துவங்கியது. ஒளிரும் அமைப்பின் அறங்காவலர்கள் சின்னசாமி, வெங்கடேஸ்வரன், ராமலிங்கம் பணிகளை துவக்கி வைத்தனர். தடுப்பணைகளை ஆழம் மற்றும் அகலப்படுத்தி நீர் பிடிப்பை அதிகரிக்க, 35 லட்சம் ரூபாயில் பணி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## வறட்சியிலிருந்து தப்பின துவரை, தட்டைப்பயறு செடிகள்

புன்செய்புளியம்பட்டி: புன்செய்புளியம்பட்டி பகுதிகளில், பரவலாக மழை பெய்ததையடுத்து, துவரை, தட்டைப் பயறு செடிகள் உயிர் பெற்றன. புன்செய்புளியம்பட்டி சுற்று வட்டார பகுதி மானாவாரி நிலங்களில், ஆடிப்பட்டத்தில் நிலக்கடலையும், ஊடுபயிராக, துவரை, ஆமணக்கு, தட்டைப் பயறு ஆகியவற்றையும் விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். மழை இல்லாததால், மானாவாரி பயிர்கள் வாடி வதங்கின. இந்நிலையில், புன்செய்புளியம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக, பரவலாக மழை பெய்ததையடுத்து, நிலக்கடலை, துவரை, தட்டைப்பயறு செடிகள் மீண்டும் செழிக்கத் துவங்கின. இதனால், விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர்.

## விவசாயிகள் மகிழ்ச்சி

கூடலூர் : கூடலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கூடலூர், முதுமலை புலிகள் காப்பகம் பகுதிகளில், போதிய மழை இல்லாததால், வறட்சி தென்பட்டது.

நீராதாரங்களில் வரத்து குறைந்ததால், வன விலங்குகளுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. மழையை எதிர்பார்த்திருந்த விவசாயிகளும் கவலையடைந்தனர்.

இந்நிலையில், சில நாட்களாக பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால், மண்ணில் ஈரம் பிடித்துள்ளது; விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## செறிவூட்டல் நீர்த்துப்போன 1,703 ஆழ்துளை கிணறுகள் மழை நீரை சேமிக்க சூப்பர் திட்டம்

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் 14 ஒன்றியங்களில் உள்ள ஆயிரத்து 703 ஆழ்துளை கிணறுகள் செறிவூட்டல் செய்யப்படும் பணி நடந்து வருகிறது. இதனால் மழைநீரை சேமித்து பயன்படுத்த முடியும் நிலை ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல்லில் 14 ஒன்றியங்கள் உள்ளன. இந்தப் பகுதிகளில் மழை காலங்களில் மழைநீரை சேமித்து வைப்பதற்கு ஏதுவாகவும், தூர்ந்துப் போன ஆழ்துளை கிணறுகளை செறிவூட்டும் பணிகளும் நடந்து வருகிறது. மேலும் ரோடு ஓரங்களில் மரக்கன்றுகளை நட்டு பசுமையாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

செறிவூட்டுதல்: தூர்ந்து போன ஆழ்துளை கிணறுகளில் செறிவூட்டும் பணிக்காக கிணற்றைச் சுற்றி 300 மீ., - நீளம், 300 மீ.,- அகலம், 1.20 மீ., - ஆழத்திற்கு குழி தோண்ட வேண்டும். ஆழ்துளை கிணற்றில் ஏற்கனவே உள்ள பி.வி.சி., குழாயில் தோண்டப்பட்ட குழியின் தரையிலிருந்து 70 செ.மீ., உயரத்திற்கு சிறு, சிறு துளைகள் இட வேண்டும். துளையிடப்பட்ட பகுதியில் நைலான் கொசு வலை கட்டப்பட வேண்டும். ஆழ்துறை கிணற்றைச் சுற்றியுள்ள குழியில் (பி.வி.சி., குழாயின் வெளிபுறத்தில்) 40 மி.மீ., ஜல்லி கற்களும், 20 மி.மீ., ஜல்லி கற்கள் மற்றும் ஆற்று மணலை இட வேண்டும். இவை முறையே 35 செ.மீ., 35 செ.மீ., மற்றும் 30 செ.மீ., அளவுள்ள 3 அடுக்குகளாக நிரப்பப்பட வேண்டும். குழியை சுற்றி இடைவெளிவிட்டு செங்கல் சுவர் அமைக்க வேண்டும். மழைநீர் ஆழ்துளை கிணற்றுக்கு செல்லும் வகையில் அமைந்திருப்பது அவசியம். இதனால் ஆழ்துளை கிணறுகள் மழைநீரால் செறிவூட்டப்படும். நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து அந்தந்த பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தண்ணீர் கிடைக்கும்.

கலெக்டர் வினய் கூறியதாவது: ஒவ்வொரு ஆழ்துளை கிணற்றின் செறிவூட்டும் பணி தலா ரூ.18 ஆயிரத்தில் நடந்து வருகிறது. முதற்கட்டமாக ஆயிரத்து 703 ஆழ்துளை கிணறுகளில்பணி நடக்கிறது. விவசாயிகள் பருவமழை காலங்களில்

நீங்களாகவே இந்த செறிவூட்டும் பணிகளையும் மேற்கொள்ளலாம். இதன் மூலம் மழைநீரை சேமிப்பதனுடன் நிலத்தடி நீர் வளம் பெருகும் வாய்ப்பு உள்ளது, என்றார்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர்கள் வழங்கல்

பழநி: பழநி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் டிராக்டர்கள் , இயந்திரங்கள் வழங்கும் விழா நடந்தது. திண்டுக்கல் மாவட்டவேளாண் இணை இயக்குனர் தங்கச்சாமி தலைமைவகித்தார். பழநி வேளாண் உதவிஇயக்குனர் சுருளியப்பன் முன்னிலைவகித்தார். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 50 சதவீதம் மானிய விலையில் ரூ.35 ஆயிரம் மானியத்தில் சுழல் கலப்பை(ரோடோ வேட்டர்) நான்கு விவசாயிகளுக்கும், டிராக்டர்கள் இரண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இணை இயக்குனர் கூறியுள்ளதாவது: பயிறுசாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உணவுபாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.1லட்சமும், இதர சிறு,குறு, மகளிர், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.1.25 லட்சமும் மானிய விலையில் டிராக்டர் வினியோகம் செய்யப்படு கிறது. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து முழுவிலையில் வாங்கும் விவசாயிகளுக்கும் மானியத்தொகை அவர்களது வங்கி கணக்கில் பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் தங்களது நிலத்தின் சிட்டா, பயிர்சாகுபடிக்கான அடங்கல், வங்கிபுத்தகம், பாஸ்போர்ட் போட்டோக்கள் உடன் சம்பந்தப்பட்ட உதவி வேளாண் அலுவலர் மூலம் விண்ணப்பிக்கலாம்' எனக்கூறியுள்ளார்.

## வெங்காய நடவுப் பணி துவக்கம்

வத்தலக்குண்டு: வத்தலக்குண்டு சுற்று வட்டாரத்தில் பெய்த மழையின் ஈரப்பதத்தில் வெங்காயம் நடவு செய்து விதைப்பை துவங்கி விட்டனர்.

வத்தலக்குண்டு, நிலக்கோட்டை, கொடைரோடு பகுதியில் நேற்று முன் தினம் 111 மி.மீ., மழை 3 நேரத்தில் கொட்டியது. பருவமழைக்கு தயாராக இருந்த விவசாயிகள் நிலத்தை உழவு செய்து பார் அமைத்து நடவிற்கு தயாராக வைத்திருந்தனர். நேற்று முன் தினம் பெய்த மழையால் நேற்று அதிகாலையில் மழையின் ஈரப்பதத்தை பயன்படுத்தி வெங்காயம் நடவில் ஈடுபட்டனர். வத்தலக்குண்டு ஒன்றிய பகுதியில் வெங்காய நடவுப்பணி பரவலாக நடைபெற்று வருகிறது.

3 மாதத்தில் சாகுபடிக்கு தயாராகும் வெங்காயத்தில் ஊடுபயிராக அகத்தியை நடவு செய்து உள்ளனர். தொடர் மழை பெய்தால் கூடுதலாக நடவு செய்யவும் திட்டமிட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். பரவலாக வெங்காயம் நடவு செய்யப்படுவதால் வெங்காயத்திற்கு விலை கிடைக்குமா என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## நெற்பயிரில் களைக்கட்டுபாடு அவசியம்: வேளாண் அதிகாரி தகவல்

திண்டுக்கல்: 'நெற்பயிரில் களை கட்டுப்பாடு அவசியம்', என வேளாண் இணை இயக்குனர் தங்கச்சாமி கூறினார்.

அவர் கூறியதாவது: களைகள் இடம், சத்து, சூரிய ஒளி மற்றும் நீர் தேவைக்காக பயிருடன் சேர்ந்து வளர்கிறது. பூச்சி மற்றும் நோய்களின் மாற்று இருப்பிடமாக களைகள் இருப்பதால், அவைகளால் பயிர்கள் பெரிதும் பாதிக்கபடுகிறது. நெற்பயிருக்கு இடையூறாக புல் வகைகளான குதிரைவாலி, மயில் கொண்டை, அருகம்புல் போன்ற களைகளும், கோரை வகைகளை சேர்ந்த ஊசி கோரை, வட்டக்கோரைகள், அகன்ற இலைகளான நீர் முள்ளி, வல்லாரை, ஆரா கீரை வளர்கின்றன.

களைகளால் 35 முதல் 45 சதவீதம் வரை மகசூல் பாதிக்கப்படும். களைகள் முளைக்காமல் இருக்க ஒரு ஏக்கரில் பிரிட்டிகுளோர், பூட்டாகுளோரை 50 கிலோ உலர்ந்த மணலுடன் கலந்து நடவு செய்த 4 நாளில் வயலில் நீர் செலுத்தாமல், தூவி விட வேண்டும். பயிர் முளைத்த பின், வயலில் ஈரம் இருக்கும் நிலையில்

ஏக்கருக்கு 80 மி.லி., பிரிபைரிபாக்சோடியம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். களைக்கொல்லி தெளித்து 3 நாட்கள் வரை வயலில் மண் மறையும் அளவிற்கு நீரால் நிரப்ப வேண்டும். இதன் மூலம் களைகள் வளர்வது தடுக்கப்படும், என கூறினார்.

## பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம்: விவசாயிகளுக்கு பயிற்சி

பழநி: பழநி உழவர்சந்தையில் மத்திய அரசின் பிரதம மந்திரி பயிர்காப்பீட்டு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் தங்கச் சாமி தலைமைவகித்தார். பழநி வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன், உழவர்சந்தை அலுவலர் காளிமுத்து முன்னிலைவகித்தனர். இதில் பிரதம மந்திரி பயிற்காப்பீடு திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் புகைப்படம், சிட்டா, அடங்கல், ஆதார் அட்டைநகர், குடும்பஅட்டைநகலுடன் அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களிடம் விண்ணப்பிக்கலாம். நெல், மக்காசோளம், நிலக்கடலை, வாழை, வெங்காயம், உருளை கிழங்கு,மிளகாய் போன்றவைகளுக்கு காப்பீடு செய்ய பிரிமீயம் செலுத்தவேண்டும். பயிர்காப்பீடு குறித்து மேலும் விபரங்களுக்கு அருகேயுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள், தேசியவங்கிகள், வேளாண் உதவிஇயக்குனர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. உழவர்சந்தை அலுவலர்கள், விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## கனமழையால் வனப்பகுதியில் யூக்கலிப்டஸ் சாகுபடி பணி தீவிரம்

தியாகதுருகம்: கனமழை எதிரொலியாக, தியாகதுருகம் வனப்பகுதியில் யூக்கலிப்டஸ் மரக்கன்றுகள் நடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.
தியாகதுருகம் சுற்றியுள்ள பகுதி யில் உள்ள வனப்பகுதியில் சமூக காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் யூக்கலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்படுகிறது. இது குறிப்பிட்ட பருவம் அடைந்ததும் மரங்கள் அறுவடை செய்து பேப்பர் உற்பத்திக்கு அனுப்பப்படுகிறது.
வனத்துறையினர் மூலம் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது. இயற்கையாக பெய்யும் மழையை கொண்டு மண்ணில் உள்ள சத்துக்களை உறிஞ்சி மரங் கள் வளர்ந்து பலன் தருகிறது.

ஒருமுறை நடப்படும் மரக்கன்று கள் வளர்ந்து அறுவடை செய்தபின் வேர்பகுதியில் வளரும் மரங்கள் மூலம், அடுத்தடுத்து மூன்று முறை பலன் தருகிறது.

ஆனைக்கல் மற்றும் சித்தால் நாற்றங்கால் பண்ணையில் ஆண்டுதோறும் 15 லட்சம் யூக்கலிப்டஸ் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வனப்பகுதியில் நடவு செய்ய அனுப்பி வைக்கப்படுகிறது.

சுழற்சி முறையில் மரங்கள் அறுவடை செய்வதால் ஆண்டுதோறும் மரங்கள் அறுவடை செய்து பேப்பர் உற்பத்திக்கு அனுப்பி வைக்க முடிகிறது. கடந்த சில மாதங்களாக அறுவடை செய்து, வேர்பகுதி அகற்றப்பட்ட இடங்களில் வனப்பகுதியை உழுது சீர்செய்து வைத்திருந்தனர். தற்போது மழை பெய்வதால் மரக்கன்று நடவு செய்யும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. 'குளோனல்' முறையில் உற்பத்தி செய்யப்படும் இக்கன்றுகள் கனமழை, கோடை வெப்பத்தை தாக்குபிடித்து வேகமாக வளரும் தன்மை கொண்டது.

காலம் முடிவதற்குள்ளாகவே ஓரளவு வேர்பிடித்து வளர்ந்துவிடும் என்பதால் கோடை வெப்பத்தை தாக்குபிடிக்கும் பக்குவத்தை அடைகிறது. இயற்கை காடுகள் அழிக்கப்பட்டது பல்வேறு பாதிப்பை ஏற்படுத்தினாலும், அரசுக்கு சிறந்த பலனை ஈட்டித்தருவதால் யூக்கலிப்டஸ் மரக்கன்றுகளை வளர்ப்பதில் வனத்துறையினர் தொய்வின்றி செயல்பட்டு வருகின்றனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

தேனி: தேனியில் உழவர் பயிற்சி மையம் சார்பில் நாளையும், நாளை மறுநாள் விவசாயிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி முகாம் நடக்கவுள்ளது.

உழவர் பயிற்சி மைய தலைவர் முருகேசன் கூறியதாவது:

இலவச நாட்டுக் கோழி வளர்ப்பு பயிற்சி மூலம் விவசாயிகள் மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்போர் சுகாதார முறையில் எவ்வாறு வளர்க்க வேண்டும். அவைகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும். உணவு பழக்க வழக்க முறைகள் போன்ற பல்வேறு தகவல்கள் தெரிவிக்கப்படும். இப்பயிற்சியில் பங்கேற்ற விரும்புவோர் 94431 08832 என்றஅலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

## கஸ்தூரி ரங்கன் அறிக்கையால் பாதிப்பு இருக்காது இடுக்கி ஏலக்காய் விவசாயிகள் நம்பிக்கை

கம்பம்: கஸ்தூரி ரங்கன் அறிக்கையால் ஏல விவசாயிகளுக்கு பாதிப்பு இருக்காது என்று ஏல விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் மேற்கு தொடர்ச்சி மலையை புராதான சின்னம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பிரதேசமாக அறிவிக்க மத்திய அரசை 'யுனெஸ்கோ' கேட்டுக் கொண்டது.

இதனை ஏற்ற மத்திய அரசு, கஸ்தூரி ரங்கன் அறிக்கை அடிப்படையில் இடுக்கி மாவட்டத்தில் 123 கிராமங்கள், புராதான சின்னம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பிரதேசமாக அறிவிக்க பரிந்துரை செய் தது.

இதற்கு ஏல விவசாயிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

களஆய்வு செய்யாமல், வான்வெளி ஆய்வின் மூலம் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, குடியிருப்பு பகுதிகள், விவசாயம், மருத்துவமனைகள் உள்ளிட்ட பல விஷயங்கள் கண்டுகொள்ளப்படவில்லை என்று குற்றம்சாட்டினர்.

இடுக்கியில் பந்த்:

மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க கேரள மாநிலம் 'ரிமோட் சென்சிங் அண்ட் சுற்றுப்புறச் சூழல் அமைப்பு' பரிந்துரை செய்த சில பகுதிகள் குடியிருப்புகள், நீர் நிலைகள், பாறைகள் தொடர்பான பகுதிகளை நீக்கி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இது தொடர்பான விபரங்கள் கேரள அரசின் 'பயோடைவர்சிட்டி' இணையத்தில் வெளியிடப்பட்டது.

கேரளாவை சேர்ந்த ஒருவர் குவாரி நடத்த உரிமம் கேட்டு தொடர்ந்த வழக்கில், மாநில அரசு தாக்கல் செய்த (அபிடவிட்டில்) உறுதிமொழியில் , அப் பகுதி சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பகுதிக்குள் வருவதால் அனுமதி தரமுடியாது என்று கூறியுள்ளது.

மாநில அரசின் 'அபிடவிட்டை' கண்டித்து நேற்று முன்தினம் இடுக்கி மாவட்டத்தில் காங்., தலைமையிலான கூட்டணி பந்த் நடத்தியது.

விவசாயிகள் கலக்கம்:

இப் போராட்டத்தால் ஏல விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். மாநில அரசின் 'அபிடவிட்' படி பார்த்தால், கஸ்தூரி ரங்கன் அறிக்கை அப்படியே அமலாகும் போல தெரிகிறது. ஏற்கெனவே கடந்த அக். 2 ல் மத்திய அரசு ஐ.நா., ஒப்பந்தத்தில்

கையெழுத்திட்டு தனது சம்மதத்தை தெரிவித்துள்ளது. எனவே கஸ்தூரி ரங்கன் அறிக்கை அப்படியே அமலாகும் என்று அச்சம் தெரிவிக்கின்றனர்.

பாதிப்பு ஏற்படாது:

ஏலவிவசாய சங்க பிரதிநிதிகள் கூறுகையில், 'கஸ்தூரி ரங்கன் அறிக்கை அப்படியே அமலாகும் என்பது உண்மையல்ல. ஏற்கெனவே காங்., அரசு தனது பரிந்துரைகளை தந்துள்ளது. மத்திய அரசும் ஏற்றுக் கொண்டது. பிற மாநில அரசுகள் இன்னமும் பரிந்துரைகளை தரவில்லை. எனவே கஸ்தூரி ரங்கன் அறிக்கையால் ஏல விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாது. மாநில அரசுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறோம்' என்கின்றனர்.

## விவசாயிகளுக்கு ஆலோசனை

ஆண்டிபட்டி: டி.சுப்புலாபுரத்தில் கிராம தங்கல் திட்டத்தில் குள்ளப்புரம் விவசாய கல்லுாரி மாணவிகள் அப்சரா,கர்ஷனாள், மித்ரா, சூர்யகலா, சரண்யா,திவ்யா, கலையரசி, மிருணா, சங்கீதா ஆகியோர் விவசாயிகளை சந்தித்து தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினர்.

டி.சுப்புலாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு இயற்கை விவசாயத்தை வலியுறுத்தி தலைமை ஆசிரியர் ராஜராம்பாண்டியன் முன்னிலையில் ஊர்வலம் நடந்தது.

வீடுகளில் காய்கறித்தோட்டம் அமைப்பது குறித்து மாணவர்கள்,மக்களுக்கும் விழிப்புணர்வு பயிற்சி அளித்தனர். மரக்கன்றுகள் நடப்பட்டன.

## விவசாயிகள் சங்க கூட்டம்

ராமநாதபுரம்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க ராமநாதபுரம் மாவட்ட செயற்குழு கூட்டம் தலைவர் முருகேசன் தலைமையில் நடந்தது. மாநில செயலர் பெருமாள், மாவட்ட செயலர் முக்குராமு, நிர்வாகிகள் ஜெயராஜ், முருகேசன் பங்கேற்றனர்.

காவிரி மேலாண் வாரியம் அமைக்க மத்திய அரசு முன் வரவேண்டும். பயிர் காப்பீட்டு நிவாரணக்கொகையை தாமதமின்றி வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## மரவள்ளி விவசாயிகள் கனமழையால் மகிழ்ச்சி

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை சுற்றுவட்டார பகுதியில், கன மழையால் மரவள்ளி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக இரவில் பரவலாக மழை பெய்கிறது. அதில், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் மங்களபுரத்தில், அதிகபட்சமாக, 24 மி.மீ., பதிவாகியுள்ளது. இதனால், இப்பகுதியில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். குறிப்பாக, மஞ்சள், மரவள்ளி கிழங்கு விவசாயிகள், மழை இல்லாததால் கவலையடைந்திருந்தனர். கடந்த அக்டோபர் மாதத்தில் வைக்கப்பட்ட மரவள்ளி கிழங்குகள், இன்னும் சில வாரங்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். கடந்த சில மாதங்களாக, போதிய மழை இல்லாததால், மரவள்ளியில் போதிய விளைச்சல் இல்லை. கிழங்கு அறுவடை சமயத்தில் மழை பெய்ய வில்லை என்றால், வெட்டி எடுப்பதும் சிரமமாகிவிடும். இந்நிலையில், கடந்த, இரண்டு நாட்களாக பெய்த மழையால், மரவள்ளி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மஞ்சள் கிழங்குகள் திரளும் நிலையில் உள்ளதால், இந்த மழை மிகவும் மிகவும் அவசியம் என்றும், கன மழையால், நிலத்தடி நீர் மட்டமும் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## அக்., 20ல் மரவள்ளி சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி

மோகனூர்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய திட்ட இயக்குனர் அகிலா வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 20ம் தேதி, காலை, 9:00 மணிக்கு, 'மரவள்ளி சாகுபடி தொழில் நுட்பங்கள்' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. மரவள்ளியில் உள்ள உயர் ரகங்கள், நடும் பருவம், நடவு முறைகள், விரைவு பயிர் பெருக்கமுறை, நடவுக்கு ஏற்ற குச்சிகள் மற்றும் கரணை தேர்வு குறித்து விளக்கப்படுகிறது. சொட்டு நீர்பாசனம், உரம் மற்றும் களை நிர்வாகம், ஊட்டச்சத்து குறைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள், பூச்சி நோய் நிர்வாகம் குறித்த தொழில் நுட்பங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும், வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது, 04286 -266 345, 266 650

என்ற எண்ணிலோ, வரும், 19ம் தேதிக்குள், முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வங்கக் கடலில் மேலடுக்கு சுழற்சி: இன்று இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள மேலடுக்கு சுழற்சியால், இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவ மழையானது தெலங்கானாவில் நிறைவடைந்து, கேரளத்தில் தீவிரம் அடைந்துள்ளது.

இந்த நிலையில், லட்சத்தீவில் மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளதால், கேரளத்தை ஒட்டியுள்ள தமிழக மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. இதேபோல், தமிழக கடலோரப் பகுதிகளை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் புதிய மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளதால், தமிழகம், புதுவையில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திருந்திய நெல் சாகுபடிக்கு அரசு மானியம் கிடைக்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு



திருந்திய நெல் சாகுபடிக்கு அரசின் மானியம் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

டெல்டா பகுதிகளை உள்ளடக்கிய மாவட்டமாக கடலூர் விளங்கி வருகிறது. எனினும் டெல்டா பகுதிகளில் நெல் சாகுபடிக்கு வழங்கப்படும் சலுகைகள், மாவட்டத்திலுள்ள டெல்டா அல்லாத மற்ற பகுதிகளுக்கு வழங்கப்படுவதில்லை. தற்போது டெல்டா பகுதியில் இயந்திர நடவுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து, விவசாயிகளுக்கு மானியம் வழங்கி வருகிறது. இந்த மானியத்தை திருந்திய நெல் சாகுபடியாக, கைகளால் நாற்று நடவு செய்யும் விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 2.40 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடிக்கு அரசு இலக்கு நிர்ணயித்து விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறது. இதில் 94 ஏக்கரில் டெல்டா பகுதியில் மட்டும் நாற்று நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பகுதியில் இயந்திரம் மூலமாக நடவு செய்வோருக்கு ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

காவிரியிலிருந்து நீர் கிடைக்குமா என்ற சந்தேகம் இருந்தபோதிலும், விவசாயிகள் பருவ மழையை எதிர்பார்த்து தற்போது நாற்றுக்களை வயலில் நட்டு வருகின்றனர். இயந்திரங்கள் கிடைக்காத பகுதியில் விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் மூலமாக கைகளால் நாற்றுக்களை நடவு செய்கிறார்கள். எனவே, இயந்திர

நடவுக்கு வழங்குவது போல் தங்களுக்கும் நடவு மானியம் வழங்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து குறிஞ்சிப்பாடி அருகே உள்ள ரெட்டிப்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி டி.சுந்தரமூர்த்தி கூறுகையில், இயந்திர நடவுக்கு ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படுகிறது. ஆனால் அவர்கள் குழித்தட்டு முறையில் மட்டுமே நடவு செய்வார்கள். ஒரு ஏக்கருக்கு 120 முதல் 130 குழித்தட்டு நாற்றுகள் தேவைப்படுகின்றன. ஒரு தட்டுக்கு ரூ.33 கட்டணமாக வசூலிக்கிறார்கள். மேலும் ரூ.100 பேட்டாவாக வழங்க வேண்டியுள்ளது. இதனால் ஏக்கருக்கு ரூ.4,400 வரையில் செலவு செய்ய வேண்டியுள்ளது. மேலும் குறிஞ்சிப்பாடியில் தற்போது நாற்றுநடவு இயந்திரம் கிடைப்பதில்லை. அதனால் அதிக காலம் காத்திருக்க வேண்டியதை தவிர்க்க தொழிலாளர்களைக் கொண்டு கைகளால் நடவு செய்கிறோம். இதற்கு ஏக்கருக்கு பல்வேறு பணிகளுக்காக 18 ஆள்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு கூலியாக ரூ.130 வழங்கப்படுகிறது. மொத்தச் செலவே ரூ.2,400 தான். கைகளால் நடவு செய்வதில், திருந்திய நெல் சாகுபடி முறைப்படி கயிறு கட்டி வரிசைப்படியே நடவு செய்யப்படுகிறது. இப்பகுதியில் விவசாயத்துக்கு ஆள்கள் அதிகமாக கிடைப்பதால் இயந்திரம் தேவைப்படுவதில்லை. எனவே இயந்திர நடவுக்கு வழங்கப்படுவது போல் கை நடவுக்கும் மானியம் வழங்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பெ.ஹரிதாஸ் கூறுகையில், இயந்திரம் மூலமாக நடவு செய்வதால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்பதால் அரசு இதனை ஊக்குவித்து வருகிறது. மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 40 ஆயிரம் ஹெக்டேரில் இயந்திர நடவு செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது இயந்திர நடவு குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதால் மீண்டும் கை நடவுக்கு மானியம் வழங்க முடியாது. எனினும் இதுகுறித்து அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்றார்.

## நிகழாண்டில் 700 ஏக்கரில் மல்பரி நடவு செய்ய இலக்கு

நாமக்கல் மாவட்டக்தில் பட்டுப்புமு வளர்ப்புக்கு நிகமாண்டில் 700 ஏக்கர் அளவுக்கு புதிதாக மல்பரி வளர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் மு.ஆசியா மரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் மாவட்டக்தில் இரு சுமற்சியின பட்டுப்புமுக்களை, இனப்பண்புகளைப் பராமரித்து விதைக்கூடுகள் உற்பத்தி செய்வதற்கென கொல்லிமலை செம்மேட்டில் 13.10 ஏக்கர் பரப்பில் பி-1 விதைப்பண்ணை செயல்பட்டு வருகிறது. இந்த அரசு பண்ணைக்கு நீர் ஆகாரக்கை மேம்படுத்த ரூ.1.19 லட்சம் மதிப்பீட்டில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பண்ணையில் விகைக்கூடு உற்பக்கி செய்வகுடன் மல்பரி நாற்று உற்பக்கி செய்து தனியார் விவசாயிகளுக்கு புதிய நடவிற்கு விற்பனை செய்து வருகின்றது. மேலும் நாமக்கல், ராசிபுரம், வெண்ணந்தூர், திருச்செங்கோடு, பரமக்தி வேலூர், கொல்லிமலை ஆகிய பகுதிகளில் மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புமு வளர்ப்பு குறித்த தொமில் நுட்ப ஆலோசனைகளை பட்டு விவசாயிகளுக்கு வழங்கிட தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் பட்டு உற்பத்தி தொழிலின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது. கடந்த 5 ஆண்டுகளில் நாமக்கல் மாவட்டக்கில் 1,179 விவசாயிகள் 1,811 ஏக்கர் பரப்பளவில் மல்பரி பயிர் சாகுபடி செய்து பட்டுக்கூடு உற்பத்தித்தொழிலை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

உயர் விளைச்சல் ரக மல்பரி 925 ஏக்கர் பரப்பளவில் நடவு செய்தமைக்காக 644 விவசாயிகளுக்கு ரூ.75.12 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 203.20 ஏக்கரில் சொட்டு நீர்ப் பாசனம் அமைத்துள்ள 124 விவசாயிகளுக்கு ரூ.46.07 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைத்தல் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு குடில் கூரை புதுப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ள 148 விவசாயிகளுக்கு ரூ.1.08 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ள 226 விவசாயிகளுக்கு ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட புழு வளர்ப்பு தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

600 விவசாயிகளுக்கு ரூ.2.02 லட்சம் புழு வளர்ப்பு காப்பீடு மற்றும் ரூ.22 லட்சம் மதிப்பில் உடல் நலக்காப்பீடு என 2,791 பயனாளிகளுக்கு 90 சதவீத மற்றும் 100 சதவீத நிதியுதவியில் காப்பீட்டு வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் கண்டுணர்வு சுற்றுலாவும், சிறிய அளவிலான 6 இளம் புழு வளர்ப்பு மையங்கள் நிறுவிய 7 விவசாயிகளுக்கு ரூ.3.50 லட்சம் நிதியுதவியும், பெரிய அளவிலான இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைத்த விவசாயிகளுக்கு ரூ.4.20 லட்சமும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளன.

250 பட்டு விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் நுண்ணூட்டச்சத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. 102 பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு ரூ.7.39 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் 2015-16 ஆம் நிதியாண்டில் 477.50 மெட்ரிக் டன் பட்டுப்புழு உற்பத்தி செய்யப்பட்டது. இதில் 399.60 மெட்ரிக் டன் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு நிகழாண்டு வெண்பட்டு உற்பத்தியில் இந்தியாவிலே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கிட நாமக்கல் மாவட்டம் தனது பங்களிப்பை முழுமையாக வழங்கியுள்ளது. இந்த நிதியாண்டில் (2016-17) சுமார் 700 ஏக்கர் பரப்பளவில் புதிய மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பட்டு விவசாயிகளில் 70 சதவிகிதத்திற்கு மேல் அயலின பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு வெண்பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்து வருகின்றனர்.

## குமரியில் மரவள்ளிக்கிழங்கு விலை உயர்வு: கிலோ ரூ. 30 க்கு விற்பனை



குமரி மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கின் சில்லறை விற்பனை விலை கிலோவிற்கு ரூ. 30 ஆக உயர்ந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டக்கில் கடற்கரை சார்ந்தப் பகுதிகளைக் கவிர இகர அனைக்குப் பகுதிகளிலும் மரவள்ளிக்கிமங்கு பயிராகிறகு. உணவுப் பயிராக உள்ள மரவள்ளிக்கிழங்கின் விலை கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகவும் சரிந்த நிலையில் கிலோவிற்கு ரூ. 15 என்ற அளவில் சில்லறை விலையாக விற்பனையானது.

இந்நிலையில் நிகமாண்டு மரவள்ளி சாகுபடியாளர்களுக்கு கைகொடுக்கும் வகையில் இகன்விலை அகிகரிக்குள்ளகு. மரவள்ளிக் கிமங்கு சாகுபடியாளர்களிடமிருந்து கடந்த ஆண்டை விட அதிக விலைக்கு கிழங்குகள் கொள்முகல் செய்யப்படுகின்றன. சந்தைகளில் கிலோவிற்கு ரூ. 30 வரை சில்லறை விலையாக கிழங்குகள் விற்பனையாகின்றன. இதன் விலை அகிகரிக்குள்ளகால் கிமங்குசாகுபடியாளர்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 50 ஆயிரம் வரை வருவாய் கிடைக்கிறது.

இகுகுறிக்கு குலசேகரக்கில் முன்னோடி விவசாயி ஒருவர் கூறியகு: நிகமாண்டில் கடும் வறட்சி காரணமாக மரவள்ளியில் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் கிழங்கிற்கான தேவைப்பாடும் அதிகரித்துள்ளது.

சேலத்திலுள்ள ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் ஆலைகளும், கேரளத்திற்கும் அதிக அளவில் கிழங்குகள் கொண்டு செல்லப்படுகின்றன. குமரி மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மக்கள் அதிக அளவில் மரவள்ளிக்கிழங்கை உணவில் சேர்த்து பயன்படுத்தி வந்தனர்.

தற்போது உணவிற்காக பயன்படுத்துவது குறைந்து விட்டது. ஆனால் கேரளத்தில் கப்பையும், மீனும் என்ற உணவுக்கூட்டிற்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு உள்ளது. இதனால் கேரளத்துக்கு குமரி மாவட்டத்திலிருந்து அதிக அளவில் மரவள்ளிக்கிழங்குகள் உணவிற்காக கொண்டு செல்லப்படுகின்றன. மரவள்ளிக்கிழங்கின் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்றார் அவர்.

## சிங்கம்புணரி வட்டாரத்தில் வாடும் பயிர்கள்: நுண்ணுயிர் திரவம் தெளிக்க யோசனை



சிங்கம்புணரி வட்டாரத்தில் வறட்சியால் வாடும் பயிர்களுக்கு நுண்ணுயிர் திரவம் தெளிக்க வேளாண் துறை பரிந்துரை செய்துள்ளது.

சிங்கம்புணரி வட்டாரத்தில் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள நெல், பயிறு வகைப் பயிர்களில் பூ மற்றும் காய் பிடிக்கும் தருணத்தில் மெத்தைலோ பாக்டீரியா திரவ நுண்ணுயிர் உரத்தை தண்ணீரில் கலந்து தெளிக்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளது. 100 மில்லி முதல் 200 மில்லி அளவிலான மெத்தைலோ பாக்டீரியா நுண்ணுயிர் உரத்தை 10 லிட்டர் நீரில் கலந்து இலையில் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும்.

இது வறண்ட காலத்தில் பயிர் வளர்ச்சி ஊக்கியாக செயல்படும். மேலும் 10 சதவிகிதம் மகசூல் அதிகரிப்பதுடன் வறட்சி தாங்கும் திறனை பயிர்களுக்கு அளிக்கிறது. இது குறித்து தகவல் வேண்டுவோர் சிங்கம்புணரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கார்த்திகேயனை அணுகலாம் என வேளாண்துறை தெரிவித்துள்ளது.

## அக். 18-ல் சின்ன வெங்காயம் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி



பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி குறித்த தொழில்நுட்ப இலவச பயிற்சி அக். 18 ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து, அந்த மையத்தின் முதுநிலை விஞ்ஞானியும், தலைவருமான (பொ) ஜெ. கதிவரன் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இப் பயிற்சியில் சின்ன வெங்காய குமிழங்களை நேர்த்தி செய்தல், ஒருங்கிணைந்த

உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, விதை மூலம் சின்ன வெங்காயம் சாகுபடி செய்தல், வறட்சி மேலாண்மை உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் செயல்விளக்கம் மற்றும் காணொலிக் காட்சிகள் மூலம் விளக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 7200044321 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது வரும் 18 ஆம் தேதி காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும்.